# රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
# பதிவாளர் நாயகம் திணைக்களம்
# REGISTRAR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. — RG/MBD/01 சுற்றறிக்கை

ප්‍රධාන කාර්යාලය
தலைமை அலுவலகம்
**HEAD OFFICE**

තැ. පෙ. අංකය / த. பெ. இல. / P. O. Box No. — 565

ඔබේ අංකය / உமது இல. / Your No.

234/A3, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.
234/A3, Denzil Kobbakaduwa Mawatha, Battaramulla.

දිනය / திகதி / Date — 2022.06.16


சுற்றறிக்கை இலக்கம் : 07/2022

சகல பிரதேச செயலாளர்கள் / மாவட்ட பதிவாளர்கள் ஊடாக
மேலதிக மாவட்ட பதிவாளர்களுக்கு.

**<u>பிறப்புச் சான்றிதழில் பெயர்களை மாற்றம் செய்தல், புதிதாக பெயர்களைச் சேர்த்தல்</u>**

பிறப்புச் சான்றிதழில் பெயர்களில் மாற்றம் செய்தல், புதிதாக பெயர்களைச் சேர்த்தல் தொடர்பாக இதுவரை வெளியிடப்பட்டுள்ள சகல சுற்றறிக்கைகளையும் இத்தால் இரத்துச் செய்வதோடு, இந்த சுற்றறிக்கை மாத்திரம் இதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்படும்.

02. 1951 ஆம் ஆண்டின் 17ம் இலக்க பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்தல் சட்டத்தின் 27 வது பிரிவின் கீழ் பெயர்களில் மாற்றம் செய்வதற்கு மக்களுக்கு உரிமையுள்ளது. இது தொடர்பாக பதிவாளர் நாயகத்தின் கையேட்டில் III வது தொகுதியில் 292 தொடக்கம் 330 வரையான கட்டளைகளின் மீது தங்களின் அவதானத்தை ஈர்ப்பதோடு குறித்த கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்காக கீழ் வரும் அறிவுரைகளை வழங்குகின்றேன்.

03. 07 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் பெயரினை மாற்றம் செய்வதற்கு / புதிதாக பெயரைச் சேர்ப்பதற்கான கோரிக்கை விடுக்கப்படும் போது பெற்றோரின் கோரிக்கைக் கடிதம் மாத்திரம் போதுமானதாகும்.

04. 07 வயது தொடக்கம் 16 வயது வரையான பிள்ளைகளின் பெயரில் மாற்றம் செய்வதற்காக கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில், கீழ்வரும் ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு உரிய பெயர் மாற்றத்தினை மேற்கொள்வதற்கான நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

**<u>மாற்றங்களை மேற்கொள்வதற்குத் தேவையான ஆவணங்கள்</u>**

i. 27ம் பிரிவின் கீழான பிரகடனப் படிவம்.
ii. பெற்றோரின் கோரிக்கைக் கடிதம்.
iii. பிள்ளை கல்வி கற்கும் பாடசாலையின் அதிபரினால் குறித்த பெயரைப் பயன்படுத்துதல் தொடர்பான சம்மதத்தைத் தெரிவித்து வழங்கப்பட்ட கடிதம்.
iv. விண்ணப்பிக்கும் பெயரை பயன்படுத்தியமையை உறுதிப்படுத்தும் ஆவணம் (இருப்பின் மாத்திரம்)

05. மேலும், இலங்கையில் பிறந்து, பின்னர் தங்களது இந்நாட்டு குடியுரிமையை நீக்கிக் கொண்டவர்கள் அல்லது வெளிநாட்டில் நிரந்தரமாக வசிப்பவர்கள் ஆகியோரின் பெயர்களை மாற்றம் செய்வதற்கான விண்ணப்பங்கள் முன்வைக்கப்படும் போது, 27வது பிரிவின் கீழான பிரகடனப் படிவம் மற்றும் குறித்த நபர் குடியுரிமையைப் பெற்ற நாட்டில் அல்லது நிரந்தரமாக வசிக்கும் நாட்டில் குறித்த பெயரைப் பயன்படுத்தியமை தொடர்பான 03 எழுத்துமூல சான்றுகளை சமர்ப்பித்தல் போதுமானது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், இணைப்பு 01 அல்லது 02 படிவங்கள், பத்திரிகை விளம்பர அறிவித்தல், கிராம உத்தியோகத்தரின் அறிக்கை போன்ற ஏனைய ஆவணங்களை முன்வைக்குமாறு கோரிக்கை விடுக்கக் கூடாது.

06. மேற்குறித்த 03, 04 மற்றும் 05 போன்ற விஷேட சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய திருத்தங்களுக்கு, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாக நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.


දුරකථන අංකය / தொலைபேசி இல. / Telephone No. — 2889488, 2889489
ෆැක්ස් අංකය / தொலைநகல் / Fax No. — 2889491
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website — www.rgd.gov.lk
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail — rgd@sltnet.lk, rg@rgd.gov.lk

07. பிறப்புச் சான்றிதழின் மூன்று பிரதிகளிலும் பெயருக்குரிய எழுத்துக்களின் குறியீடுகளில் காணப்படும் பிழைகள், எழுத்திலணக்கப் பிழைகள், ஆண், பெண் பால் மாற்றம் ஏற்படும் வகையில் பெயரை எழுதியிருத்தல் மற்றும் சொற்களுக்கு இடையே இடைவெளி / எழுத்துகளுக்கு இடையே இடைவெளி காணப்படும் போது, பெயரைப் பயன்படுத்தியதாக ஏனைய ஆவணங்களை முன்வைக்கும் சந்தர்ப்பங்களில் ஆவணங்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர், அசல் பிரதியின் இரண்டாவது நிரலில் தேவையான மாற்றங்களை மேற்கொண்டு மேலதிக மாவட்ட பதிவாளரின் ஒப்பத்துடன் திகதியையும் குறிப்பிடுதல் வேண்டுமென்பதோடு, பின்னர் இரண்டாவது பிரதியில் மாற்றங்களை மேற்கொள்வதற்காக உரிய ஆவணப் பதிவறைக்கு பிரித்தெடுப்பொன்றை / சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அனுப்புதல் வேண்டும்.

**<u>திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தேவையான ஆவணங்கள்</u>**

i. கோரிக்கை கடிதம்
ii. சத்தியக் கடதாசி
iii. விண்ணப்பித்த பெயரைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் (03 ஆவணங்கள் போதுமானது)

08. பிறப்புச் சான்றிதழின் மூன்றாவது பிரதியில் பெயர் சரியாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அசல் மற்றும் இரண்டாவது பிரதிகளில் பெயர் மாற்றம் காணப்படும் சந்தர்ப்பங்களில், அதாவது.

1.1 பெயருக்குரிய எழுத்துக்களின் குறியீடுகளில் மாற்றங்கள் காணப்படுதல்
1.2 எழுத்திலக்கணப் பிழைகள் இருப்பது
1.3 ஆண்பால் பெண்பால் மாற்றம் ஏற்படும் வகையில் பெயர் எழுதப்பட்டிருத்தல்
1.4 சொற்களுக்கு இடையே / எழுத்துக்களுக்கு இடையே இடைவெளி காணப்படும் போது
1.5 பெயரின் ஒரு பகுதி விடுபட்டிருத்தல் அல்லது மேலதிக பகுதியொன்று குறிப்பிடப்பட்டிருக்கும் போது

மேலே குறிப்பிடப்பட்டவாறு மாற்றங்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில் மூன்றாவது பிரதி பிழையின்றி காணப்பட்டமையை அடிப்படையாகக் கொண்டு பெயரினை பயன்படுத்தியமை தொடர்பான ஏனைய ஆவணங்களை முன்வைக்கும் பட்டசத்தில் உரிய ஆவணங்களில் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் அசல் பிரதியின் இரண்டாவது நிரலில் தேவையான மாற்றங்களை மேற்கொண்டு மேலதிக மாவட்ட பதிவாளரின் கையொப்பத்துடன் திகதியையும் குறிப்பிடுதல் வேண்டுமென்பதோடு, பின்னர் இரண்டாவது பிரதியில் மாற்றங்களை மேற்கொள்வதற்காக உரிய ஆவணப் பதிவறைக்கு பிரித்தெடுப்பொன்றை / சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அனுப்புதல் வேண்டும்.

**<u>திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தேவையான ஆவணங்கள்</u>**

i. கோரிக்கை கடிதம்
ii. சத்தியக் கடதாசி
iii. விண்ணப்பித்த பெயரைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் (03 ஆவணங்கள் போதுமானது)
(இலவசமாக வழங்கப்பட்ட பிரதி இருக்குமேயானால் அதனை முன்வைத்தல் வேண்டும். 1.5 ன் கீழான மாற்றங்களுக்காக இலவசமாக வழங்கப்பட்ட பிரதியைப் பரீட்சித்தல் அத்தியவசியமாகும்.)

09. இரண்டாவது நிரலிலுள்ள பெயருடன், தந்தையின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நிரலிலுள்ள முதற்பெயரை சேர்த்தல், இரண்டாவது நிரலில் உள்ள முதற்பெயரை நீக்குதல் அல்லது பெயரைச் சுருக்கிப் பயன்படுத்துதல் (உதாரணம் - விலியம் எனும் பெயரை விலி என பயன்படுத்துதல்)

<u>மாற்றங்களை மேற்கொள்வதற்குத் தேவையான ஆவணங்கள்</u>

i. 27ம் பிரிவின் கீழான பிரகடனப் படிவம்.
ii. சத்தியக் கடதாசி
iii. விண்ணப்பித்த பெயரை ஒரு வருடத்திற்கு மேலாக பயன்படுத்துவதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் (03 ஆவணங்கள் போதுமானது)

10. பெற்றோர் வெவ்வேறு இரண்டு இனத்தினராக இருக்கும் சந்தர்ப்பத்தில் தாயின் அல்லது தந்தையின் இனத்தை பிரதிபலிக்கும் வண்ணம் பெயரை மாற்றுதல்.

<u>மாற்றங்களை மேற்கொள்வதற்குத் தேவையான ஆவணங்கள்</u>

i. 27ம் பிரிவின் கீழான பிரகடனப் படிவம்.
ii. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் பத்திரம் (இணைப்பு 1 அல்லது 2)
iii. நாளாந்த பத்திரிகையில் அல்லது வார இறுதி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பர அறிவித்தல்.
iv. சத்தியக் கடதாசி (இனத்தை மறைக்கும் நோக்கத்தில் முன்வைக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்)
v. கிராம உத்தியோகத்தரின் அறிக்கை
vi. பெற்றோரின் திருமணச் சான்றிதழ் (இருப்பின்)
vii. விண்ணப்பிக்கும் பெயரைப் பயன்படுத்தியமையை உறுதிப்படுத்தும் ஆவணம் (03 ஆவணங்கள் போதுமானது)

*பத்திரிகையில் விளம்பரத்தை பிரசுரித்து ஒரு வருட காலம் கடந்திருப்பின், பெயரினை பயன்படுத்தியமை தொடர்பான ஆவணமானது ஒரு வருட காலத்திற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்பதோடு, ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் பெயரைப் பயன்படுத்தியதாக உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்கள் இருப்பின் பத்திரிகை விளம்பரத்தை பிரசுரித்து ஒரு வருட காலம் கடந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

11. இனத்தில் மாற்றம் ஏற்படாத வகையில் இதுவரை பயன்படுத்திய பெயரில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை மேற்கொள்ளல்.

<u>மாற்றங்களை மேற்கொள்வதற்குத் தேவையான ஆவணங்கள்</u>

i. 27ம் பிரிவின் கீழான பிரகடனப் படிவம்.
ii. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் பத்திரம் (இணைப்பு 1 அல்லது 2)
iii. நாளாந்த பத்திரிகையில் அல்லது வார இறுதி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பர அறிவித்தல்.
(பிரசுரிக்கப்பட்டு ஒரு வருட காலத்தை கடந்திருத்தல் அத்தியவசியமாகும்)
iv. சத்தியக் கடதாசி
v. கிராம உத்தியோகத்தரின் அறிக்கை
vi. பெற்றோரின் திருமணச் சான்றிதழ் (இருப்பின்)

vii. விண்ணப்பிக்கும் பெயரை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தியமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் (03 ஆவணங்கள் போதுமானது)

12. தனது இனத்தை வெளிப்படுத்தாத விதத்தில் பெயரினை முழுமையாக மாற்றுதல்.

**மாற்றங்களை மேற்கொள்வதற்குத் தேவையான ஆவணங்கள்**

i. 27ம் பிரிவின் கீழான பிரகடனப் படிவம்.
ii. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவம் (இணைப்பு 1 அல்லது 2)
iii. நாளாந்த பத்திரிகையில் அல்லது வார இறுதி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பர அறிவித்தல்.
(பிரசுரிக்கப்பட்டு ஒரு வருட காலத்தை கடந்திருத்தல் அத்தியவசியமாகும்)
iv. சத்தியக் கடதாசி (இனத்தை மறைக்கும் நோக்கத்தில் முன்வைக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்)
v. கிராம உத்தியோகத்தரின் அறிக்கை
vi. மதத்தை மாற்றம் செய்துள்ள சந்தர்ப்பத்தில் உரிய மத வழிபாட்டுத்தளத்திலிருந்து பெற்றுக் கொண்ட கடிதம்.
vii. வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவர் முஸ்லிம் சட்டத்தின் கீழ் திருமணம் முடித்திருப்பின் முஸ்லிம் திருமணச் சான்றிதல்.
viii. விண்ணப்பிக்கும் பெயரை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தியமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் (03 ஆவணங்கள் போதுமானது)

13. மேற்குறித்த ஒவ்வொரு விடயங்களின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் எந்தவொரு நபருக்கும் தனது பெயரை மாற்றம் செய்து கொள்ளும் உரிமையுள்ள போதிலும் உச்சரிக்க முடியாத, சப்தமிட்டு பெயர் என்ற வகையில் பயன்படுத்த முடியாத சில எழுத்துக்களை மாற்றம் செய்வதற்கு பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்தல் சட்டத்தின் 27ம் பிரிவின் கீழ் இடமளிக்கக் கூடாது. அவ்வாறான கோரிக்கைகளை முதல் சந்தர்ப்பத்திலேயே நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

14. ஒரு பெயரை மாற்றுவதற்கு / சேர்ப்பதற்கான கோரிக்கை முன்வைக்கப்படும் போது, குறித்த கோரிக்கைக்கான காரணத்தையும் கோரிக்கையாளரின் அடையாளத்தையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். முன்மொழியப்பட்ட பெயரைப் பயன்படுத்தியமை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துமூல சான்று ஆவணங்களின் நம்பகத்தன்மை தொடர்பாக ஆராயப்படுதல் வேண்டும். குறிப்பாக மேலே உள்ள 10,11,12 இன் கீழ் பிரகடனப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பங்களில், சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக வாய்மூல சான்றுகள் மற்றும் கூற்றுக்கள் மூலம் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதோடு அது தொடர்பாக பொருத்தமான நியதிச்சட்டமுறை விசாரணையை நடாத்தியன் பின்னர் உரிய மாற்றங்களுக்கான அனுமதியை வழங்குதல் மிகவும் பொருத்தமாகும். இந்த விசாரணையை இயன்றளவு சுருக்கமாக நிறைவு செய்து உங்களின் தீர்மானத்தை வழங்குதல் வேண்டும்.

15. பிறப்புச் சான்றிதழில் பெயர் மாற்றம் செய்தல் தொடர்பாக ஏதேனும் சிக்கல் தோன்றுமாயின், அது தொடர்பாக ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய மாவட்ட உதவிப் பதிவாளர் நாயகத்திற்கு உடனடியாக எழுத்துப்பூர்வமான கோரிக்கையை முன்வைத்தல் வேண்டும். மாவட்ட உதவிப் பதிவாளர் நாயகத்தினால் குறித்த ஆவணங்களை பரீட்சித்ததன் பின்னர் அல்லது அவரினால் பொருத்தமானதெனக் கருதும் விசாரணையை நடாத்தியதன் பின்னர், குறித்த ஆவணங்கள் தன்னிடம் கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் மேலதிக மாவட்டப் பதிவாளரிடம் தனது பரிந்துரையை / அனுமதியை வழங்குதல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் சந்தேகம் இருப்பின், பிரகடனப் பத்திரத்தை நிராகரித்து அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலம் அறிவித்து சட்ட நடவடிக்கையை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தல்களை வழங்குவது பொருத்தமானது. இருப்பினும், பிரகடனப் பத்திரம் கிடைக்கப் பெற்று ஒரு மாதத்தினுள் சகல பணிகளும் நிறைவு செய்யப்படுதல் வேண்டும்.

16. பெயர் மாற்றம் தொடர்பான தகவல்களை பிரதான அலுவலகத்தில் முன்வைத்தல்.

பிரதேச செயலகத்தின் மேலதிக மாவட்டப் பதிவாளரினால், ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னர் மேற்குறித்த் 10, 11, 12 இன் கீழ் திருத்தப்பட்ட தகவல்களை மாத்திரம் இணைப்பு 03 இன் பிரகாரம் தயாரித்து மாவட்டத்திற்குப் பொறுப்பான உதவிப் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மாவட்டத்திற்குப் பொறுப்பான உதவிப் பதிவாளர் நாயகத்தினால் தனது மாவட்டத்திற்குரிய பிரதேச செயலக அலுவலகங்களிலிருந்து அனுப்பப்படும் தகவல்களை ஒவ்வொரு மாதமும் 15ம் திகதிக்கு முன்னர் rgd.civil@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக பிரதான அலுவலகத்தின் சிவில் பதிவுப் பிரிவுக்கு முன்வைத்தல் வேண்டும்.

17. 2022.07.01 ஆம் திகதி முதல், இந்த சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் பெயர் மாற்றங்களை மேற்கொள்ளுமாறும், அந்தந்த சந்தர்ப்பங்களின் கீழ், தேவைப்படும் ஆவணங்களைத் தவிர தேவையற்ற விதத்தில் வேறு எழுத்துமூலமான சான்றுகளைச் சமர்ப்பிக்குமாறு கோரி விண்ணப்பதாரர்களை அசௌகரியங்களுக்கு உட்படுத்த வேண்டாம் என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறே, சட்டத்தின் 27 வது பிரிவின் கீழ் பெயரில் திருத்தங்களை மேற்கொள்வது அல்லது புதிய பெயர்களைச் சேர்ப்பது தொடர்பாக முடிவெடுக்கும் முழு அதிகாரமும் உங்களுக்கு இருப்பதால், கோரிக்கையை ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது தொடர்பான தீர்மானத்தை தாமதமின்றி விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்குமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

18. மேலும், இந்த சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை மீறும் விதத்தில் போலி ஆவணங்களைத் தயாரிப்பதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரவு வழங்கப்பட்டிருப்பது கண்டறியப்படின் அது தொடர்பாக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் சட்ட நடவடிக்கையெடுக்கப்படும் என வலியுறுத்திக் கூறுகின்றேன்.

19. இந்த சுற்றறிக்கை கிடைத்தமை தொடர்பாக அறியத்தரவும்.

**பீ.எஸ்.பீ. அபேவர்தன**
பதிவாளர் நாயகம்

பிரதி :

| | |
|---|---|
| 01. செயலாளர், பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | - தயவுடன் அறிந்து கொள்வதற்கு |
| 02. செயலாளர், கல்வி அமைச்சு | - தயவுடன் அறிந்து கொள்வதற்கு |
| 03. தேசிய புலனாய்வுத் தலைவர் , பாதுகாப்பு அமைச்சு | - தயவுடன் அறிந்து கொள்வதற்கு |
| 04. சகல மாவட்ட செயலாளர்கள் / மேலதிக பதிவாளர் நாயகங்கள் | - தயவுடன் அறிந்து கொள்வதற்கு |
| 05. பிரதான அலுவலகத்தின் சகல நிறைவேற்று மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு | - தயவுடன் அறிந்து கொள்வதற்கு |

இணைப்பு 1

**<u>பிறப்புச் சான்றிதழின் இரண்டாவது நிரலில் குறிப்பிடப்படும் பெயரை மாற்றம் செய்தல் 07 வயது முதல் 21 வயது வரை</u>**

**பிறப்புடன் தொடர்புடைய**

மாவட்டம் : ..................................................

பிரதேச செயலகம் : ..................................................

பிறப்புச் சான்றிதழின் இலக்கம் : .................................. பிறந்த திகதி : ..................................................

மேலதிக மாவட்ட பதிவாளரினால் பூரணப்படுத்தல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு :

   அ. பெயர் : ..................................................

   ஆ. முழுப் பெயர் : ..................................................

   ..................................................

2. மாற்றம் செய்ததன் பின்னர் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் பெயர் : ..................................................

   ..................................................

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..................................................

4. கடவுச்சீட்டு இலக்கம் : ..................................................

5. சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் : ..................................................

   (3, 4, 5 ஆளடையாள இலக்கங்களில் ஒன்றையாவது குறிப்பிடுதல் அத்தியவசியமாகும். அவ்வாறின்றேல் அது தொடர்பாக சத்தியக் கடதாசியொன்று முன்வைத்தல் வேண்டும்.)

6. நிரந்தர வதிவிடம் தொடர்பான விபரம் :

   அ. வதிவிட முகவரி : ..................................................

   ..................................................

   ஆ. கிராம சேவர் பிரிவு : ..................................................

   இ. அண்மையிலுள்ள நகரம் : ..................................................

   ஈ. மாவட்டம் : ..................................................

   (விண்ணப்பதாரரின் வதிவிடம் மற்றும் நடத்தை தொடர்பான கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் (DS 4) முன்வைக்கப்படுதல் வேண்டும்.)

7. தற்காலிக முகவரி : ..............................................................................................

..............................................................................................

8. தற்காலிக முகவரியில் வசிப்பதற்கான காரணம் : ..............................................................................................

..............................................................................................

9. இதற்கு முன்னர் வசித்த முகவரிகள் : ..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

10. தொலைபேசி இலக்கம் : நிரந்தர · ........................................ செல்லிட : ........................................

11. மின்னஞ்சல் முகவரி : (இருப்பின்) ..............................................................................................

12. அ). வேலை / தொழில்: ..............................................................................................

ஆ). வேலை / தொழில் புரியும் இடத்தின் முகவரி : ..............................................................................................

..............................................................................................

13. தாயின் விபரம் :

அ. முழுப் பெயர் : ..............................................................................................

..............................................................................................

ஆ. இனம் : ..............................................................................................

இ. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..............................................................................................

14. தந்தையின் விபரம் :

அ. முழுப் பெயர் : ..............................................................................................

..............................................................................................

ஆ. இனம் : ..............................................................................................

இ. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..............................................................................................

15. பிறப்புச் சான்றிதழ் உரிமையாளர் திருமணமானவரா/திருமணமாகாதவரா : ..............................

16. வாழ்க்கைத் துணைவரின் விபரம் :

அ. முழுப் பெயர் : ..........................................................................................................................

ஆ. முகவரி : ..........................................................................................................................

இ. இனம் : ..........................................................................................................................

ஈ. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................................

உ. தொழில் : ..........................................................................................................................

ஊ. தொழில் புரியும் இடத்தின் முகவரி : : ..........................................................................................

17. பிள்ளைகளின் விபரம் :

| முழுப் பெயர் | வயது |
|---|---|
| .................................................................................. | ........................ |
| .................................................................................. | ........................ |
| .................................................................................. | ........................ |
| .................................................................................. | ........................ |

18. சகோதர/ சகோதரிகளின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தற்போதைய வதிவிட முகவரி தொடர்பான விபரம் :

| பெயர் | தே.அ.அ. இல. | முகவரி |
|---|---|---|
| ............................................... | .................................... | ................................................... |
| ............................................... | .................................... | ................................................... |
| ............................................... | .................................... | ................................................... |
| ............................................... | .................................... | ................................................... |

(இயன்றவரை சகல விபரங்களையும் வழங்குதல் வேண்டும்)

19. இதற்கு முன்னர் பெயர் மாற்றம் செய்திருப்பின் ஏற்கனவே பயன்படுத்திய பெயரைக் குறிப்பிடவும்.

1. ..........................................................................................................................

2. ..........................................................................................................................

3. ..........................................................................................................................

20. பெயரை மாற்றுவதற்கு எதிர்பார்க்கும் காரணத்தை தெளிவாகக் குறிப்பிடவும்.

..............................................................................................................................................

..............................................................................................................................................

21. பிரகடனம் செய்பவரின் :

அ. முழுப் பெயர் : ..............................................................................................................

ஆ. இனம் : ..............................................................................................................

இ. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ......................................................................

ஈ. முகவரி : ..............................................................................................................

22. பிரகடனம் செய்வது என்ன உறவு முறையில் என்பது தொடர்பாக : (தாய் / தந்தை / பாதுகாவலர்)
(தேவையற்ற சொற்களை நீக்கி விடவும்)

மேற்குறித்த விபரங்கள் என்னிடமுள்ள எழுத்துமூலமான சான்றுகளின் பிரகாரம் உண்மையானதும் சரியானதுமாகும் என உறுதிப்படுத்துகின்றேன். பிழையான அல்லது உண்மைக்குப் புறம்பான விபரங்களை வழங்குவதன் மூலம் எழக்கூடிய சகல வகையிலுமான சட்ட ரீதியான மற்றும் சட்ட ரீதியற்ற அனைத்து பொறுப்புக்களையும் நான் ஏற்றுக் கொள்கின்றேன் என மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

.......................................................  ...............................................
பிரகடனம் செய்பவரின் ஒப்பம்  திகதி

.................................................................................................................................... ஆகிய ........................................................................ எனும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்ட நபர் இந்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ..............................................................
..............................................................................................................................................
எனும் முகவரியில் நிரந்தரமாக / தற்காலிகமாக வசிப்பவர் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................................................  .....................................................
பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி  திகதி
(ஒப்பம் மற்றும் அலுவலக முத்திரை)

இணைப்பு 2

## பிறப்புச் சான்றிதழின் இரண்டாவது நிரலில் குறிப்பிடப்படும் பெயரை மாற்றம் செய்தல்

**21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு**

**பிறப்புடன் தொடர்புடைய**

மாவட்டம் : ..................................................

பிரதேச செயலகம் : ..................................................

பிறப்புச் சான்றிதழின் இலக்கம் : .................................. பிறந்த திகதி : ..................................................

மேலதிக மாவட்ட பதிவாளரினால் பூரணப்படுத்தல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு :

   அ. பெயர் : ..................................................

   ஆ. முழுப் பெயர் : ..................................................

   ..................................................

2. மாற்றம் செய்ததன் பின்னர் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் பெயர் : ..................................................

   ..................................................

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..................................................

4. கடவுச்சீட்டு இலக்கம் : ..................................................

5. சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் : ..................................................

   (3, 4, 5 ஆளடையாள இலக்கங்களில் ஒன்றையாவது குறிப்பிடுதல் அத்தியவசியமாகும். அவ்வாறின்றேல் அது தொடர்பாக சத்தியக் கடதாசியொன்று முன்வைத்தல் வேண்டும்.)

6. நிரந்தர வதிவிடம் தொடர்பான விபரம் :

   அ. வதிவிட முகவரி : ..................................................

   ..................................................

   ஆ. கிராம சேவர் பிரிவு : ..................................................

   இ. அண்மையிலுள்ள நகரம் : ..................................................

   ஈ. மாவட்டம் : ..................................................

(விண்ணப்பதாரரின் வதிவிடம் மற்றும் நடத்தை தொடர்பான கிராம உத்தியேகத்தர் சான்றிதழ் (DS 4) முன்வைக்கப்படுதல் வேண்டும்.)

7. தற்காலிக முகவரி : ..........................................................................................................

..........................................................................................................

8. தற்காலிக முகவரியில் வசிப்பதற்கான காரணம் : ..........................................................................

..........................................................................................................

9. இதற்கு முன்னர் வசித்த முகவரிகள் : ..........................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

10. தொலைபேசி இலக்கம் : நிரந்தர - .................................... செல்லிட : ....................................

11. மின்னஞ்சல் முகவரி : (இருப்பின்) ..........................................................................

12. அ). வேலை / தொழில்: ..........................................................................

ஆ). வேலை / தொழில் புரியும் இடத்தின் முகவரி : ..........................................................................

..........................................................................................................

13. தாயின் விபரம் :

அ. முழுப் பெயர் : ..........................................................................

..........................................................................................................

ஆ. இனம் : ..........................................................................

இ. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................

14. தந்தையின் விபரம் :

அ. முழுப் பெயர் : ..........................................................................

..........................................................................................................

ஆ. இனம் : ..........................................................................

இ. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................

15. பிறப்புச் சான்றிதழ் உரிமையாளர் திருமணமானவரா/திருமணமாகாதவரா : ...............................

16. வாழ்க்கைத் துணைவரின் விபரம் :

அ. முழுப் பெயர் : ..........................................................................................................

ஆ. முகவரி : ..........................................................................................................

இ. இனம் : ..........................................................................................................

ஈ. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................

உ. தொழில் : ..........................................................................................................

ஊ. தொழில் புரியும் இடத்தின் முகவரி : : ...................................................................

17. பிள்ளைகளின் விபரம் :

| முழுப் பெயர் | வயது |
|---|---|
| ........................................................................................ | ...................... |
| ........................................................................................ | ...................... |
| ........................................................................................ | ...................... |
| ........................................................................................ | ...................... |

18. சகோதர/ சகோதரிகளின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தற்போதைய வதிவிட முகவரி தொடர்பான விபரம் :

| பெயர் | தே.அ.அ. இல. | முகவரி |
|---|---|---|
| .................................................. | ...................................... | ................................................... |
| .................................................. | ...................................... | ................................................... |
| .................................................. | ...................................... | ................................................... |
| .................................................. | ...................................... | ................................................... |

(இயன்றவரை சகல விபரங்களையும் வழங்குதல் வேண்டும்)

19. இதற்கு முன்னர் பெயர் மாற்றம் செய்திருப்பின் ஏற்கனவே பயன்படுத்திய பெயரைக் குறிப்பிடவும்.

1. ..........................................................................................................

2. ..........................................................................................................

3. ..........................................................................................................

20. பெயரை மாற்றுவதற்கு எதிர்பார்க்கும் காரணத்தை தெளிவாகக் குறிப்பிடவும்.

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

21. விண்ணப்பதாரர் தொடர்பாக சிவில் நீதிமன்ற வழக்கு ஏதும் இருப்பின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்.
(காரணம், நீதிமன்றம் மற்றும் வழக்கிலக்கம் உட்பட)

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

மேற்குறித்த விபரங்கள் என்னிடமுள்ள எழுத்துமூலமான சான்றுகளின் பிரகாரம் உண்மையானதும் சரியானதுமாகும் என உறுதிப்படுத்துகின்றேன். பிழையான அல்லது உண்மைக்குப் புறம்பான விபரங்களை வழங்குவதன் மூலம் எழக்கூடிய சகல வகையிலுமான சட்ட ரீதியான மற்றும் சட்ட ரீதியற்ற அனைத்து பொறுப்புக்களையும் நான் ஏற்றுக் கொள்கின்றேன் என மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

.................................................... ..............................................
விண்ணப்பதாரரின் ஒப்பம் திகதி

.......................................................................................................................................... ஆகிய
.................................................................. எனும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்ட நபர் .................................................................................................................................
எனும் முகவரியில் நிரந்தரமாக / தற்காலிகமாக வசிப்பவர் என்பதையும் மேற்குறித்த நபர் இந்த பொலிஸ் பிரிவில் வசிப்பவர் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

................................................................... ..............................................
பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திகதி
(ஒப்பம் மற்றும் அலுவலக முத்திரை)